1995 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 100, டாக்டர் சு. மணிமேகலை, மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்.

100—

வேதாகமப் பள்ளிகளில் மாணவிகளையும் அனுமதித்தல்

33029—டாக்டர் சு. மணிமேகலை:*

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

"வேதாகமப் பள்ளிகளில்" மாணவர்கள் சேர்க்கப்படுவதோடு மட்டுமல்லாமல் மாணவிகளும் சேர்ந்து வேதம் பயில அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்: மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

வேதாகமப் பள்ளிகளில் மாணவிகளும் சேர்ந்து வேதம் பயில இந்து மத ஆகம சாஸ்திரம் இடம் தரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் சு. மணிமேகலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிக் வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய 4 மறைகளையும் முறைப்படி பயில உபநயனம் என்ற முப்புரி நூல் அணிவிக்கின்ற சடங்கு முறைப்படி. 'பார்ப்பு' என்பது 'த்விஜன்' என்ற வடமொழிச் சொல்லின் தமிழ் ஆக்கமாகும். அதன் பொருள் 2 ஆவது பிறவி என்று பெயர். வேதம் ஓதும் அந்தணர்கள் இரண்டாவது பிறவி எடுத்து அந்தத் தகுதியை அடைவதாக சாஸ்த்திரம், ஆங்கிலப் பொருளாதார நிபுணர் John Maynard Keynes சொன்னதுபோல், "The important thing for a Government is not to do things which individuals are doing already and to do them a little better or a little worse, but to do those things which are not at all done presently." என்ற வார்த்தைகளுக்கு ஏற்ப, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்தணர் அல்லாதவர்களும் வேதம் ஓதவேண்டுமென்று, மற்றவர்களுக்கும் இடம் ஒதுக்கி ஏற்பாடு செய்துள்ள இந்த நாளில் ஆன்மீகச் செம்மல் ஸ்ரீபகவான் சத்ய சாய்பாபா அவர்களும்,

"ஓம்—பூர்புவஸ்ஸுவ:—தத்ஸவிதுர்வரேணியம்—
பர்கோ தேவஸ்ய தீமஹி—
தியோயோ ந: ப்ரசோயாத்"

என்ற காயத்ரி மந்திரத்தை—சூரிய பகவானை—காயத்ரி தேவியாகப் பாவித்து.......

[1995 மார்ச் 24 முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எனக்காவது தெரிந்த மொழியாக இருந்தால் மொழிபெயர்த்தாவது சொல்லுவேன், கேள்வியைக் கேளுங்கள்.

டாக்டர் சு. மணிமேகலை: அறிவு, திறமை, புத்தி கொடு என்று ஆண்கள் மட்டுமே சொல்லலாம் என்ற சம்பிரதாயத்தை, அறிவிலோ, திறமையிலோ எந்தவிதத்திலும் குறையாத பெண்களும் சொல்லலாம் என்று மாற்றியுள்ளார். அதேபோல், மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோவிலிலும் பெண்களே கருவறைப் பணியைச் செய்து சிறப்பாக வழிபாடு செய்து வரும் இந்த நாளில் ஜாதி சமய வேறுபாடுகள் எல்லாம் கடந்து நீதி ஒன்றையே தன் முழு மூச்சாகக் கொண்டு, வேதாகமப் பள்ளியில் மற்றவர்களுக்கும் இடமளிக்கின்ற மகத்தான பணியைச் செய்து கொண்டிருக்கும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அமைச்சரவையில் வீற்றிருக்கும் எமது அமைச்சர்—நாராயணி, நாராயணி என்ற நாமத்தை நாளும் உச்சரிக்கின்ற இந்த நேரத்தில் நான்கு மறைகளையும் முறைப்படி கற்று பெண்களும் கடவுள் பணியாற்ற ஆவன செய்வாரா என்று கேட்டு, இப்பொழுது தற்சமயம் தமிழகத்தில் எத்தனை வேதாகமப் பள்ளிகள் இயங்கி வருகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வெ. நடேசன் பால்ராஜ்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் துறையைச் சேர்ந்த 4 பெரிய கோயில்களில் வேதாகமப் பாடசாலைகள் நடைபெறுகின்றன. பெண்கள் வேதாகமப் பள்ளிகளில் சேர்ந்து வேதம் பயில்வது குறித்து பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் வேதாகமப் பாடசாலையின் ஆசிரியர் திரு. பாலசுப்பிரமணிய சிவாச்சாரியார் மற்றும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் வேத பாடசாலை ஆசிரியர் கே. எஸ். இராமானந்த சாஸ்திரி ஆகியோர் கீழ்க்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளனர். “ஆகமப் பள்ளிகளில் பெண்கள் பயிற்சி அளிக்கப்படுவதற்கான அகச் சான்றுகளும், புறச்சான்றுகளும் ஏதும் இல்லை. அர்ச்சகர் பயிற்சி என்பது பொது நல வழிபாட்டு முறையைப் பின்பற்றுவது. பொது வழிபாட்டில் குடும்பத்தில் ஈடுபடும் பெண்கள் பங்கு பெறுவது இயலாததாகிறது. அர்ச்சகர் பயிற்சிப் பள்ளி குருகுலவாச முறைப்படி நடைபெறுகிறது. இதில் பயிற்சி பெறுவோர்களால் குடும்பி, முழங்கால் அளவு உடை மற்றும் பூஜை பொருட்கள் சேகரித்தல், அனுஷ்டானம், பிராணாயாமம் முதலிய பிரம்மச்சரிய வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. இதில் 12 முதல் 14 வயது முடிய உள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, வேதாகமப் பயிற்சிப் பள்ளிகளில் பெண்களைச் சேர்த்துக்கொள்ள இயலாது என்றும், காலங்காலமாக மாணவர்கள் மட்டுமே வேதம் பயின்று வருவதைத் தவிர பெண்கள் படிப்பது வழக்கம் இல்லை.

உபநயனம் என்னும் சடங்கு ஆன பின்னரே வேதம் பயில வேண்டுமென்று முக்கியமான விதி உள்ளதாலும், உபநயனம் செய்யாதவன் வேதம் படிக்கக் கூடாது என்றும் விதிகள் சொல்லுகின்றன" எனக் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கு உபநயனம் என்னும் சடங்கு இந்து மத ஆகமத்தில் நடைபெறுவதில்லை. வேதம் படிப்பதற்கான முக்கியமான சாஸ்திர ரீதியான தகுதி மாணவிகளுக்கு இல்லாத நிலையில் பெண்களை வேத பாடசாலையில் சேர்ப்பது சாத்தியமில்லை என்று மேற்கூறிய வல்லுநர்கள் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

83—

திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல்

***33655**—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் புதியதாக இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவள்ளூர் நகரத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் ஏற்கனவே இரத்த வங்கி ஏற்படுத்தப்பட்டு உள்ளதால் புதியதாக இரத்த வங்கி ஏற்படுத்தும் கேள்விக்கு இடமில்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்*
(பத்தாம் பட்டியல்)

1—

நீர்பிடிப்புப் பகுதிகளில் பட்டா வழங்குதல்

வினா எண் **38386**—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கண்மாய்களில் நீர்பிடிப்புப் பகுதிகளில் பட்டா வழங்குவதைத் தவிர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

---

* குறிப்பு: இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.